KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 2 No. n11 (2019)

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
Vol. 2 No. n11 (2019): KALANJIYAM August 2019

கவி கா.மு. ஷெரீபின் 'தமிழரசில் முஸ்லிம்கள்': சமூக, அரசியல், பண்பாட்டுப் பார்வை

Kavi Ka. Mu. Sheriff's 'Tamilarasil Muslims': A Social, Political and Cultural Perspective

Dr. U. Alibava[1*]

[1] Professor and Head, Department of Tamil Studies, Bharathidasan University, Tiruchirappalli – 620024, Tamil Nadu, India. ORCID: https://orcid.org/0000-0002-2051-7002

*தொடர்புக்கு: alibavapkm@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 14 July 2019
Revised: 19 July 2019
Accepted: 25 July 2019
Published: 01 August 2019

Peer review
Double-blind peer review

Keywords
Ka. Mu. Sheriff
Tamilarasil Muslims
Tamil Muslims
Tamil Society
Social History
Political Participation
Cultural Identity
Communal Harmony
Tamil Language
Social Unity

ABSTRACT

This article examines the social, political and cultural perspectives of Muslims in Tamil society as represented in the writings of poet Ka.Mu. Sheriff, particularly in his work 'Tamilarasil Muslims'. It highlights the historical presence and contributions of Muslims to the Tamil region and considers their participation in its social, linguistic, cultural and political life. The discussion draws attention to the close relationship between Tamil identity and Muslim identity, emphasizing that language, cultural practices and shared historical experiences have fostered a sense of belonging. It also explores the poet's concern for communal harmony, social unity, mutual respect and the rejection of divisions based on religion or community. By presenting Muslims as an integral part of Tamil society, the work underscores their role in the development of Tamil language and culture and in the shaping of the region's collective history. The article thus offers a perspective on Tamil Muslim identity and advocates an inclusive understanding of Tamil social life grounded in equality, coexistence and human solidarity.

ஆய்வுச் சுருக்கம்

தமிழகத்தின் சமூக, அரசியல் மற்றும் பண்பாட்டு வரலாற்றில் இஸ்லாமியர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. குறிப்பாக, தமிழ் மொழி, இலக்கியம், வணிகம், அரசியல் மற்றும் சமூக நல்லிணக்கம் ஆகிய துறைகளில் தமிழக முஸ்லிம்கள் ஆற்றியுள்ள பணிகள் வரலாற்றுச் சிறப்புடையவை. இத்தகைய சூழலில் கவி கா.மு. ஷெரீப் எழுதிய தமிழரசில் முஸ்லிம்கள் என்னும் நூல், தமிழக முஸ்லிம்களின் இன அடையாளம், மொழிப்பற்று, தாய்நாட்டுப் பற்று, சமயக் கொள்கை மற்றும் அரசியல் பங்கேற்பு ஆகியவற்றை எடுத்துரைக்கும் முக்கியமான கருத்தியல் ஆவணமாக விளங்குகிறது.இந்நூலில் ஆசிரியர், தமிழக முஸ்லிம்கள் சமய அடிப்படையில் இஸ்லாமியர்களாகவும், மொழி மற்றும் பண்பாட்டு அடிப்படையில் தமிழர்களாகவும் விளங்குவதை வலியுறுத்துகிறார். இஸ்லாமியத்தின் அடிப்படைக் கொள்கைகளான சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம், மனிதநேயம் ஆகியவற்றையும் தாய்நாட்டின் மீதான பற்றையும் தொடர்புபடுத்தி விளக்குகிறார். மேலும், தமிழக முஸ்லிம்களின் வரலாற்றுப் பங்களிப்பு, தமிழ் இலக்கிய வளர்ச்சியில் முஸ்லிம் புலவர்களின் பங்கு, தமிழரசு அமைப்பில் அவர்களுக்குரிய இடம், மொழிவழி மாநிலக்

© 2019 The Author(s) · CC BY 4.0 · OPEN ACCESS

கொள்கை ஆகியவற்றையும் விவாதிக்கிறார்.இக்கட்டுரை தமிழரசில் முஸ்லிம்கள் நூலை முதன்மை ஆதாரமாகக் கொண்டு, அதன் சமூக வரலாற்றுப் பின்னணி, மொழி மற்றும் இன அடையாளச் சிந்தனை, சமய நல்லிணக்க நோக்கு, தேசிய உணர்வு, தமிழ் இலக்கியப் பங்களிப்பு ஆகியவற்றை ஆய்வு நோக்கில் பகுப்பாய்வு செய்கிறது. நூலில் காணப்படும் அரசியல் கருத்துகள் அதன் காலச்சூழலோடு இணைத்துப் புரிந்துகொள்ளப்பட வேண்டியவை என்பதையும் இவ்வாய்வு சுட்டிக்காட்டுகிறது.

திறவுச்சொற்கள்: கவி கா.மு. ஷெரீப், தமிழரசு, தமிழக முஸ்லிம்கள், தமிழ்த் தேசியம், சமய நல்லிணக்கம், மொழிப்பற்று, இஸ்லாமியச் சிந்தனை, தமிழ் இலக்கியம்.

How to cite this article: Alibava, U. (2019). கவி கா.மு. ஷெரீபின் 'தமிழரசில் முஸ்லிம்கள்': சமூக, அரசியல், பண்பாட்டுப் பார்வை [Kavi Ka. Mu. Sheriff's 'Tamilarasil Muslims': A Social, Political and Cultural Perspective]. *KALANJIYAM – International Journal of Tamil Studies, 2*(n11), 1–8.
Copyright and licence: © 2019 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. https://creativecommons.org/licenses/by/4.0/

தமிழக வரலாற்றில் முஸ்லிம்களின் வருகையும் வாழ்வியலும் தனித்துவமான வரலாற்றுப் பின்னணியைக் கொண்டுள்ளன. தமிழகத்தின் கடற்கரைப் பகுதிகளில் நடைபெற்ற வணிகத் தொடர்புகள், பண்பாட்டுப் பரிமாற்றங்கள், சமயத் தொடர்புகள் ஆகியவற்றின் வழியாக இஸ்லாமியச் சமூகம் தமிழகத்தில் வேரூன்றியது. இம்மக்கள் காலப்போக்கில் தமிழகத்தின் மொழி, பண்பாடு, சமூக அமைப்பு மற்றும் அரசியல் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பைப் பெற்றனர்.

தமிழக முஸ்லிம்களின் அடையாளம் குறித்த விவாதத்தில் சமயம், மொழி, இனம், நாடு ஆகிய கூறுகள் ஒன்றோடொன்று தொடர்புடையவையாக அமைகின்றன. இத்தகைய அடையாளச் சிக்கல்களை ஆராய்ந்து, தமிழக முஸ்லிம்களின் தமிழர் என்ற பண்பாட்டு அடையாளத்தை வலியுறுத்தும் நோக்கில் கவி கா.மு. ஷெரீப் தமிழரசில் முஸ்லிம்கள் என்ற நூலை எழுதியுள்ளார்.

இந்நூல் வெறும் சமய விளக்க நூலாக அமையாமல், முஸ்லிம்களின் சமூக நிலை, அரசியல் பங்கேற்பு, மொழி சார்ந்த உரிமை, தாய்நாட்டுப் பற்று மற்றும் எதிர்காலத் தமிழரசில் அவர்களுக்குரிய இடம் ஆகியவற்றைப் பேசும் கருத்தியல் நூலாக அமைந்துள்ளது. நூலின் தொடக்கத்திலேயே உலகின் பல்வேறு பகுதிகளில் நிலவும் சமய மற்றும் இன முரண்பாடுகளை எடுத்துக்காட்டி, தமிழகத்தில் இந்து - முஸ்லிம் ஒற்றுமை நிலவுவதற்குத் தமிழ்ப் பண்பாடு ஒரு முக்கியக் காரணமாக இருப்பதை ஆசிரியர் முன்வைக்கிறார் (தமிழரசில் முஸ்லிம்கள், ப. 2). இதன் வழியாகத் தமிழ் அடையாளம் சமய எல்லைகளைக் கடந்து மக்களை இணைக்கும் பண்பாட்டுக் கூறாக விளக்கப்படுகிறது.

கவி கா.மு. ஷெரீபின் சமூகச் சிந்தனை

கவி கா.மு. ஷெரீப் தமது படைப்புகளில் சமூக உணர்வுக்கும் மனிதநேயத்திற்கும் முக்கியத்துவம் அளித்தவர். தமிழரசில் முஸ்லிம்கள் நூலில் அவரது சமூகச் சிந்தனை அரசியல், சமயம், மொழி, இனம் ஆகிய பல்வேறு தளங்களில் வெளிப்படுவதைக் காணமுடிகிறது. இந்நூலில் அவர் முன்வைக்கும்

முதன்மையான கருத்து, தமிழக முஸ்லிம்கள் தங்களைத் தமிழ்ச் சமூகத்தின் ஓர் அங்கமாக உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதாகும்.

சமய வேறுபாடுகள் மனிதர்களிடையே பகைமையை உருவாக்கக் கூடாது என்றும், தாய்மொழி மற்றும் தாய்நாட்டின் அடிப்படையில் மக்கள் ஒன்றிணைந்து வாழ வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார். தமிழக முஸ்லிம்கள் தமிழர்களோடு இணைந்து வாழ்வதன் காரணமாகவே பிற பகுதிகளில் காணப்படும் இந்து - முஸ்லிம் மோதல்களிலிருந்து தமிழகம் வேறுபட்ட சமூகச் சூழலைக் கொண்டிருப்பதாக கவிஞர் கருதுகிறார் (தமிழரசில் முஸ்லிம்கள், பக். 3-4). இதன் மூலம் ஆசிரியரின் சமூகச் சிந்தனையில் ஒற்றுமை, சகோதரத்துவம், பரஸ்பர மதிப்பு ஆகியவை முதன்மையான இடத்தைப் பெறுகின்றன என்பதை அறிய முடிகிறது.

தமிழக முஸ்லிம்களின் வரலாற்றுப் பங்களிப்பு

தமிழக முஸ்லிம்களின் வரலாற்றை விளக்கும்போது ஆசிரியர் வணிகத் தொடர்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறார். இஸ்லாமியர்கள் தமிழகத்திற்கு வருவதற்கு முன்பே கடற்கரைப் பகுதிகளில் அரபு வணிகர்களின் தொடர்புகள் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். வணிகத்தின் வழியாகத் தமிழகத்துடன் தொடர்புகொண்ட முஸ்லிம்கள் பின்னர் இம்மண்ணின் சமூக மற்றும் பண்பாட்டு வாழ்க்கையோடு இணைந்தனர் என்பது அவரது விளக்கமாக இருக்கின்றது. மேலும், தமிழக வரலாற்றில் முஸ்லிம்கள் ஆற்றிய அரசியல் மற்றும் நிர்வாகப் பங்களிப்புகளையும் நூல் எடுத்துரைக்கிறது. இராமநாதபுரம் சேதுபதி மன்னரின் அமைச்சராகப் பணியாற்றிய சையத் காதிர், தமிழ்ப் புலவர்களால் சீதக்காதி என்று போற்றப்பட்ட செய்தியைக் கவிஞர் இந்நூலில் பதிவு செய்கிறார்.

சீதக்காதி போன்ற வள்ளல்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் புலவர்களின் வாழ்வாதாரத்திற்கும் உதவியதை எடுத்துரைப்பதன் மூலம், முஸ்லிம்களின் பங்களிப்பு சமய எல்லைக்குள் மட்டும் சுருங்கிவிடவில்லை என்பதைக் கவிஞர் தெளிவுபடுத்துகிறார் (தமிழரசில் முஸ்லிம்கள், ஷெரீப் 4). இதிலிருந்து தமிழக முஸ்லிம்கள் அரசியல், வணிகம், கொடை, இலக்கியம் ஆகிய துறைகளில் பங்களித்த சமூகத்தினராகக் கவிஞரால் அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

இஸ்லாமியக் கொள்கைகளும் மனிதநேயச் சிந்தனையும்

இஸ்லாமி மார்க்கத்தின் அடிப்படைக் கொள்கைகள் சமூக வாழ்வோடு தொடர்புபடுத்திக் கவிஞரால் விளக்கப்படுகின்றன. அன்பு, அமைதி, சமத்துவம், சமாதானம், சகோதரத்துவம் ஆகியவை இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படைப் பண்புகளாகக் கவிஞர் குறிப்பிடுகிறார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வில் நபிகளார் அளித்த பிற சமயத்தவர்களுக்கான மரியாதை, வழிபாட்டுச் சுதந்திரம் வழங்குதல், பகைவரிடத்தும் மனிதநேயத்துடன் நடந்துகொள்ளுதல் போன்ற நிகழ்வுகளை எடுத்துக்காட்டுகிறார். குறிப்பாக, மதீனாவில் கிறித்தவப்

பாதிரிகளுக்கு வழிபாட்டிற்கான இடமளித்த நிகழ்வையும், தம்மைக் கொல்ல வந்தவரிடம் அவரது வாளைத் திருப்பிக் கொடுத்த நிகழ்வையும் கவிஞர் சுட்டிக்காட்டுகிறார் (தமிழரசில் முஸ்லிம்கள், ப. 5). இந்த நிகழ்வுகளின் வழியாக இஸ்லாமியர்கள் சமத்துவ உணர்வுடையவர்களாகவும், பிற சமயத்தவர்களின் உரிமைகளை மதிப்பவர்களாகவும் விளங்க வேண்டும் என்பது கவிஞரின் கருத்தாக அமைகிறது. மேலும், இஸ்லாமிய அடையாளம் என்பது வெளிப்புறத் தோற்றத்தால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை; மனிதனின் உள்ளார்ந்த பண்புகளாலும் செயல்பாடுகளாலும் மதிப்பிடப்பட வேண்டும் என்ற கருத்தையும் கவிஞர் நூலில் முன்வைக்கிறார் (தமிழரசில் முஸ்லிம்கள், ப. 8).

இதன் அடிப்படையில், சமய நம்பிக்கையை மனிதநேயத்திலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது என்ற கவிஞரின் கருத்தியல் நிலைப்பாடு இந்நூலில் வெளிப்படுகிறது.

தாய்நாட்டுப் பற்றும் தேசிய உணர்வும்

தமிழரசில் முஸ்லிம்கள் நூலின் முக்கியமான கருத்தியல் கூறுகளில் ஒன்று தாய்நாட்டுப் பற்றாகும். இஸ்லாமியர்கள் உலகின் எந்த நாட்டில் வாழ்ந்தாலும், அந்த நாட்டின் நலனிலும் வளர்ச்சியிலும் பங்கெடுக்க வேண்டும் என்பதைக் கவிஞர் வலியுறுத்துகிறார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழக முஸ்லிம்கள் பங்கேற்ற செய்திகளையும் நூல் பதிவு செய்கிறது. வ.உ. சிதம்பரனார் முன்னெடுத்த சுதேசிக் கப்பல் இயக்கத்திற்குத் தமிழக முஸ்லிம்கள் பொருளாதார ஆதரவு வழங்கியதைக் கவிஞர் குறிப்பிடுகிறார். 1908ஆம் ஆண்டு தூத்துக்குடியில் நடைபெற்ற போராட்டச் சூழலில் உயிரிழந்தவர்களில் முஸ்லிம்களும் இருந்ததாகவும் கவிஞர் பதிவு செய்கிறார் (தமிழரசில் முஸ்லிம்கள், ப. 5). இதன் மூலம் இந்திய விடுதலைப் போராட்டத்தில் முஸ்லிம்களின் பங்களிப்பை நினைவுபடுத்துகிறார். மேலும், இந்திய முஸ்லிம்கள் தங்களது பிறந்த மண்ணின் நலனுக்காகப் பாடுபட வேண்டும் என்பதையும், நாட்டின் அரசியல் மற்றும் சமூக முன்னேற்றத்தில் பங்கேற்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார். அபூபக்கர் (ரலி) அவர்களின் எளிமையான வாழ்வையும் நாட்டுமக்கள் மீதான அக்கறையையும் எடுத்துக்காட்டி, ஆட்சியாளர்களின் பொறுப்புணர்வைக் கவிஞர் விளக்குகிறார் (தமிழரசில் முஸ்லிம்கள், ப. 10). இவ்வாறு சமயக் கொள்கையையும் தேசிய உணர்வையும் இணைத்துப் பேசுவது நூலின் குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

தமிழ்மொழியும் முஸ்லிம்களின் இன அடையாளமும்

தமிழக முஸ்லிம்களின் அடையாளத்தை விளக்குவதில் மொழிக்குக் கவிஞர் முதன்மையான இடத்தை வழங்குகிறார். தமிழகத்தில் வாழும் முஸ்லிம்கள் மொழியாலும் இனப் பண்பாட்டாலும் தமிழர்களே என்ற கருத்தை அவர் தொடர்ந்து

வலியுறுத்துகிறார். சில குடும்பங்களில் உருது பேசப்படுவதும், சமய வழிபாட்டில் அறபு மொழி பயன்படுத்தப்படுவதும் அவர்களின் தமிழர் அடையாளத்தை மாற்றிவிட முடியாது என்பது ஆசிரியரின் வாதமாகும். சமய வழக்கங்களுக்கும் தாய்மொழி அடையாளத்திற்கும் இடையிலான வேறுபாட்டைத் தெளிவுபடுத்துகிறார். மேலும், ராவுத்தன், மரக்காயர் போன்ற சமூகப் பெயர்களின் சொற்பிறப்பையும் தமிழ் மரபோடு தொடர்புபடுத்தி விளக்குகிறார். இதன் வழியாக தமிழக முஸ்லிம்களின் வாழ்வியலில் தமிழ் மொழியும் பண்பாடும் எவ்வாறு கலந்துள்ளன என்பதைக் கவிஞர் எடுத்துரைக்கிறார் (தமிழரசில் முஸ்லிம்கள், ப. 11).

தமிழர் என்ற அடையாளம் சமய அடிப்படையில் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை; மொழி, நிலம், வரலாறு, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையிலும் தீர்மானிக்கப்படுகிறது என்ற கருத்தை இந்நூல் முன்வைக்கிறது.

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் முஸ்லிம்களின் பங்களிப்பு

தமிழ் இலக்கிய வரலாற்றில் முஸ்லிம் புலவர்களின் பங்களிப்பு அளப்பரியது. இக்கருத்தை விளக்குவதற்காக ஆசிரியர் பல்வேறு புலவர்களின் பெயர்களையும் அவர்களின் இலக்கியப் பணிகளையும் எடுத்துரைக்கிறார். குறிப்பாக, உமறுப்புலவர் இயற்றிய சீறாப்புராணம் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் முதன்மைக் காப்பியமாக விளங்குகிறது. நபிகள் நாயகத்தின் வரலாற்றைத் தமிழில் காப்பிய வடிவில் படைத்த உமறுப்புலவரின் பங்களிப்பைக் கவிஞர் சிறப்பாகக் குறிப்பிடுகிறார். மேலும், இராஜநாயகம் என்னும் இலக்கியத்தை இயற்றிய வண்ணக்களஞ்சியப் புலவர், சக்கரைப் புலவர், சவ்வாதுப் புலவர், புலிக்குட்டிப் புலவர், கா.ப. செய்குத்தம்பிப் பாவலர் போன்றோரின் இலக்கியப் பணிகளையும் அவர் பதிவு செய்கிறார் (தமிழரசில் முஸ்லிம்கள், ப. 12).

இந்தப் பதிவுகள் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் முஸ்லிம்கள் வகித்த இடத்தை வெளிப்படுத்துகின்றன. சமய அடையாளத்தைக் கடந்து தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகப் பணியாற்றிய புலவர்களின் வரலாற்றை நினைவூட்டுவது இந்நூலின் முக்கியமான நோக்கமாக இருப்பது புலப்படுகிறது.

மொழிவழி மாநிலமும் தமிழரசுக் கொள்கையும்

இந்நூலில் மொழிவழி மாநில அமைப்பு குறித்த கருத்துகளும் விரிவாக விவாதிக்கப்படுகின்றன. மகாத்மா காந்தி முன்வைத்த மொழிவழி மாகாணப் பிரிவினை தொடர்பான கருத்தைக் கவிஞர் நினைவுபடுத்துகிறார். தமிழ்மொழி அடிப்படையில் தமிழகத்தின் அரசியல் மற்றும் நிர்வாக அமைப்பு உருவாக வேண்டும் என்பது அவரது நிலைப்பாடாக இருப்பது வெளிப்படுகிறது (கவி கா.மு. ஷெரீப், பக். 11-12).

தமிழரசு என்பது ஒரு குறிப்பிட்ட சமயத்தினருக்கான அரசாக அல்லாமல், தமிழ் இனத்தின் அடிப்படையில் உருவாகும் அரசியல் அமைப்பாக இருக்க வேண்டும் என்று

கவிஞர் விளக்குகிறார். எனவே, தமிழரசில் முஸ்லிம்களுக்கும் பிற சமயத்தவர்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதே அவரது எதிர்பார்ப்பாகும். தமிழரசில் சட்டமன்றம், அரசு அலுவலகங்கள், பொதுநிர்வாகம் மற்றும் தேசியக் கல்வி ஆகியவை தமிழ்மொழியில் நடைபெற வேண்டும் என அவர் வலியுறுத்துகிறார். அதே நேரத்தில், தனிநபர்கள் தங்களுடைய சமய நூல்களையும் தாய்மொழிகளையும் கற்கும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிடுகிறார் (தமிழரசில் முஸ்லிம்கள், பக். 14-15).

இதன் மூலம் தமிழ்மொழி ஆட்சிமொழியாக விளங்கினாலும், சமய மற்றும் மொழிச் சிறுபான்மையினரின் உரிமைகள் பாதிக்கப்படக் கூடாது என்ற கருத்தைக் கவிஞர் முன்வைக்கிறார்.

திராவிட இயக்கம் குறித்த ஆசிரியரின் அரசியல் நிலைப்பாடு

நூலின் இறுதிப் பகுதிகளில் திராவிட இயக்கம் குறித்த ஆசிரியரின் விமர்சனங்கள் இடம்பெறுகின்றன. இஸ்லாமிய சமயக் கொள்கைகளுக்கும் திராவிட இயக்கத்தின் சில கருத்தியல் நிலைப்பாடுகளுக்கும் இடையில் முரண்பாடு இருப்பதாகக் கவிஞர் கருதுகிறார். குறிப்பாக, கடவுள் நம்பிக்கை, பிற சமயங்களுக்கான மரியாதை, மொழி அடையாளம், தேசிய உணர்வு போன்றவற்றின் அடிப்படையில் தனது கருத்துகளை முன்வைக்கிறார். இஸ்லாமியர்கள் தங்களது சமய நம்பிக்கைகளுக்கு முரணான அரசியல் இயக்கங்களில் ஈடுபடக் கூடாது என்பது அவரது நிலைப்பாடாக அமைகிறது (தமிழரசில் முஸ்லிம், பக். 13-16). இப்பகுதியை ஆய்வு செய்யும்போது, ஆசிரியரின் கருத்துகள் அவரது காலகட்டத்தின் அரசியல் சூழல், தமிழரசுக் கொள்கை மற்றும் சமய அடையாளச் சிந்தனை ஆகியவற்றின் பின்னணியில் புரிந்துகொள்ளப்பட வேண்டும். குறிப்பாக, திராவிட இயக்கம் குறித்த அவரது மதிப்பீடுகள் ஆசிரியரின் தனிப்பட்ட அரசியல் மற்றும் கருத்தியல் நிலைப்பாடுகளாகவே அணுகப்பட வேண்டும்; அவற்றை இயக்கத்தின் முழுமையான வரலாற்று மதிப்பீடாகக் கருத இயலாது. இதனால் நூல் இலக்கிய மற்றும் சமூக ஆவணமாக மட்டுமன்றி, குறிப்பிட்ட காலகட்டத்தின் அரசியல் கருத்து மோதல்களைப் பதிவு செய்யும் ஆவணமாகவும் விளங்குகிறது.

தமிழரசில் முஸ்லிம்களின் எதிர்காலம் குறித்த பார்வை

தமிழரசு அமைப்பில் முஸ்லிம்களின் வாழ்வுரிமை, சமயச் சுதந்திரம், மொழி உரிமை மற்றும் அரசியல் பங்கேற்பு ஆகியவற்றை ஆசிரியர் விரிவாக விவாதிக்கிறார். தமிழரசு என்பது மத அடிப்படையில் உருவாகும் அரசாக இல்லாமல், மொழி மற்றும் இன அடையாளத்தின் அடிப்படையில் உருவாகும் அரசாக இருக்க வேண்டும் என்பதே அவரது அடிப்படைக் கருத்தாகும். எனவே, முஸ்லிம்கள் தங்களுடைய சமய வழிபாடுகளையும் தனித்துவமான பண்பாட்டு நடைமுறைகளையும் தொடர்ந்து பின்பற்றுவதற்கு உரிமை பெற்றிருக்க வேண்டும். அதே நேரத்தில், பொதுநிர்வாகம் மற்றும் கல்வி போன்ற துறைகளில் தமிழ்மொழிக்கு

முதன்மை அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்துகிறார் (ஷெரீப் 14-15). இக்கருத்தின் வழியாக மொழி ஒருமைப்பாட்டையும் சமயப் பன்மைத்துவத்தையும் இணைத்துச் செயல்படுத்த முடியும் என்ற அரசியல் சிந்தனையை ஆசிரியர் முன்வைக்கிறார்.

நூலின் மொழிநடையும் கருத்தியல் வெளிப்பும்

கவி கா.மு. ஷெரீபின் இந்நூல் எளிய உரைநடையையும் வாதத் திறனையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. வாசகர்களிடம் நேரடியாக உரையாடும் முறையில் கருத்துகளை எடுத்துரைப்பது நூலின் குறிப்பிடத்தக்க நடையாகத் திகழ்கிறது. வரலாற்று நிகழ்வுகள், சமயச் சான்றுகள், அரசியல் தலைவர்களின் செயல்பாடுகள், தமிழ் இலக்கியப் புலவர்களின் பங்களிப்புகள் ஆகியவற்றை எடுத்துக்காட்டுகளாகக் கொண்டு தனது கருத்துகளை நிறுவுகிறார். இதனால் நூல் வெறும் கருத்துப் பதிவாக இல்லாமல், வரலாறு மற்றும் சமூகச் சான்றுகளை முன்வைக்கும் விவாத நூலாகவும் அமைகிறது. நூலின் மற்றொரு சிறப்பு, தமிழ் அடையாளத்தையும் இஸ்லாமிய அடையாளத்தையும் ஒன்றுக்கொன்று எதிரானவையாகக் கருதாமல் அவற்றின் இணக்கத்தன்மையை வலியுறுத்துவதாகும். சமயம் ஒருவரின் ஆன்மிக அடையாளமாகவும், மொழி மற்றும் நிலம் அவருடைய சமூகப் பண்பாட்டு அடையாளமாகவும் அமைய முடியும் என்ற கருத்து இந்நூலில் வெளிப்படுகிறது.

நூலின் சமகாலப் பொருத்தம்

தமிழரசில் முஸ்லிம்கள் நூல் எழுதப்பட்ட காலத்திற்குரிய அரசியல் விவாதங்களை உள்ளடக்கியிருந்தாலும், அதன் அடிப்படைக் கருத்துகளில் பல இன்றைய சமூகச் சூழலிலும் விவாதிக்கத்தக்கவையாக உள்ளன. குறிப்பாக, சமயப் பன்மைத்துவம், மொழி உரிமை, சிறுபான்மையினரின் அரசியல் பங்கேற்பு, தாய்நாட்டுப் பற்று, பண்பாட்டு அடையாளம் போன்றவை இன்றைய சமூகத்திலும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒருவர் தனது சமய நம்பிக்கையைப் பாதுகாத்துக்கொண்டே தாய்மொழி மற்றும் தாய்நாட்டின் வளர்ச்சிக்குப் பங்களிக்க முடியும் என்ற கருத்து இந்நூலின் அடிப்படைச் சிந்தனையாக விளக்குகிறது. தமிழக முஸ்லிம்களின் வரலாற்றையும் தமிழ் இலக்கியப் பங்களிப்பையும் ஆய்வு செய்பவர்களுக்கு இந்நூல் ஒரு முதன்மை ஆதாரமாகப் பயன்படக்கூடியது. அதேவேளையில், நூலில் இடம்பெறும் வரலாற்று மற்றும் அரசியல் கூற்றுகளைப் பிற சமகால ஆவணங்களுடனும் வரலாற்று ஆய்வுகளுடனும் ஒப்பிட்டு மேலும் விரிவான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டிய தேவையும் உள்ளது.

கவி கா.மு. ஷெரீப் எழுதிய தமிழரசில் முஸ்லிம்கள் என்னும் நூல் தமிழக முஸ்லிம்களின் சமூக, சமய, மொழி மற்றும் அரசியல் அடையாளங்களை ஒருங்கிணைத்து விளக்கும் முக்கியமான கருத்தியல் படைப்பாகும். இந்நூலின் வழியாகக் கவிஞர் தமிழக முஸ்லிம்கள் தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழ் இலக்கியம்

ஆகியவற்றோடு கொண்டுள்ள வரலாற்றுத் தொடர்புகளை எடுத்துரைக்கிறார். இஸ்லாமியத்தின் அடிப்படைக் கொள்கைகளான சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம், மனிதநேயம் ஆகியவற்றைத் தாய்நாட்டுப் பற்றுடனும் சமூகப் பொறுப்புடனும் இணைத்துப் பார்க்கிறார். வணிகம், அரசியல், கொடை, தமிழ் இலக்கியம் போன்ற துறைகளில் முஸ்லிம்கள் ஆற்றிய பங்களிப்புகளை எடுத்துக்காட்டி, தமிழக வரலாற்றில் அவர்களுக்குரிய இடத்தை நிலைநிறுத்துகிறார். குறிப்பாக, உமறுப்புலவர், சீதக்காதி, கா.ப. செய்குத்தம்பிப் பாவலர் போன்ற ஆளுமைகளின் வழியாகத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் முஸ்லிம்கள் ஆற்றிய பணிகளை நினைவுபடுத்துகிறார். மேலும், தமிழரசு அமைப்பில் சமயச் சுதந்திரமும் மொழி உரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கருத்தையும் முன்வைக்கிறார். இந்நூலின் அரசியல் நிலைப்பாடுகள் அதன் வரலாற்றுக் காலச்சூழலோடு இணைத்துப் புரிந்துகொள்ளப்பட வேண்டியவை. அதேநேரத்தில், மொழி அடையாளத்தையும் சமய அடையாளத்தையும் இணக்கமாகப் புரிந்துகொள்ளும் ஆசிரியரின் முயற்சி குறிப்பிடத்தக்கதாகும். எனவே, தமிழரசில் முஸ்லிம்கள் என்னும் நூல் தமிழக முஸ்லிம்களின் வரலாறு, தமிழ்மொழிப் பற்று, இஸ்லாமிய மனிதநேயம், தமிழ் இலக்கியப் பங்களிப்பு மற்றும் தமிழ்த் தேசியச் சிந்தனை ஆகியவற்றை ஆராய்வதற்கான முக்கியமான முதன்மை நூலாக மதிப்பிடத்தக்கது. தமிழ் மற்றும் இஸ்லாமிய அடையாளங்கள் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல; அவை ஒரே சமூக வாழ்வில் இணைந்து செயல்படக்கூடியவை என்பதை எடுத்துரைப்பதே இந்நூலின் மையச் செய்தியாக அமைகிறது.

துணை நூல்

1. ஷெரீப், கா.மு. தமிழரசில் முஸ்லிம்கள். முதற்பதிப்பு, 1951.